*Editor's Note*

Please address all communication for the English pages **to The English Editor,** 'Morning Star' UDUVIL, CHUNNAKAM.


# THE MORNING STAR


*Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. Q B / 100125 / 81*

Established: 1841 : A Christian Weekly : Published Every Friday

Vol. 141 JAFFNA, FRIDAY, 24th JULY, 1981 No. 30

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE



*Subscription*

Inland: Rs. 35/- per year.

Single issues are available at the VARANY MISSION SALES CENTRE, Model Market, Jaffna at Re. 1/- per copy.

*Apply to*

**The Manager,**

'Morning Star', Vaddukoddai.


RECEIVED PERIODICALS DIVISION

## Service of Remembrance

A Service of Remembrance for the life and work of Mr. P. W. Ariaratnam, former Supervisor of the Lower School at Jaffna College was held on 4-7-81 at the Cathedral Church Vaddukoddai.

The gift by the members of the family of an artistically designed *Lectern* for the Vaddukoddai Church was dedicated by Bishop Ambalavanar at the commencement of the Service.

Rev. S. N. Sugunanandan, the Presbyter of the Vaddukoddai Church led the Service. The Lessons were read by Mr. G. N. Edward and Mrs. J. J. Niles. Chandrarajan Ariaratnam rendered a special solo.

The Rt. Rev. S. Kulandran in his tribute spoke of the rich contribution Mr. Ariaratnam had made to the Jaffna Council of the SIUC and to the Diocese for over four decades. His sense of commitment to the tasks alloted to him was a great source of strength in the life of the church and the community.

Rev. J. J. Ratnarajah offered the Litany of Thanksgiving.

## Deletion of 'OL' Literature from OL Syllabus

Many parents have deplored the omission from the G.C.E. (OL) Syllabus in Sri Lanka, of English Literature as a subject for students.

Till recently this subject was in the syllabus, though many schools did not cater for it in their Time Tables for lack of staff to handle the subject.

OL Literature is a good stepping stone for AL Literature. The present trend of encouraging the study of English in schools must be followed up by concrete plans on a long term basis. "To cut the coat according to the cloth" is educationally unsound.

## YMCA Youth Camps

*Four* Camps have been organised by the National Council of YMCAs, for the August school vacation. The Camps are meant for boys, girls, young women and teachers.

There will also be a Sports and Athletic Camp for boys and girls between the age group 12 to 17.

An *Outward Bound Training Camp* for Women has also been organised. This camp will be limited only to 30 women. Only those who are physically fit should apply for participation in this camp which has a tough training schedule.

Mr. Arafa Yoosuf is Programme officer, National Council of YMCAs.

## Women and the DDC Elections

Eight women contested the DDC Election in Sri Lanka. One of them was elected Chairman of the *Gampaha* Development Council. She is Mrs. Kulaseeli Perera (UNP).

Four Women were elected, all of them on the UNP ticket. They will be members of the DCs of Kegalle, Kurunegala, Anuradhapura and Gampaha.

Two women fielded by the JVP and one who contested in Jaffna as an Independent failed to get seats.

## "Come, let us rise up and build together"

The Twenty eighth General Assembly of the World Student Christian Federation (WSCF) will meet at the University of San Francisco California from August 11 — 22.

The Assembly will bring together some 250 participants from 100 National Student Christian Movements, leaders and friends representing all Christian traditions.

The theme of the Assembly — *Come, let us rise up and build* — is a continuation of the Federation's focus on Christian witness and the struggle for liberation during the last four years.

The WSCF was last hosted in North America in 1949 when it was held in Whitby, Canada.

In announcing the Assembly, the WSCF states: — "After the disarray which followed the 60 s and 70 s, the SCM is entering a period of serious reflection and search for new forms of existence".

## Indian President's Visit Deferred

The Indian President, Mr. Sanjiva Reddy was due to arrive in Sri Lanka on August 10 for an official visit.

He has deferred the visit for "unavoidable reasons". An official of the Indian Ministry of External Affairs arrived here on 20-7-81 it is learnt to discuss the new dates with the Sri Lankan Government.

*Jaffna College*

## Alumni Association

The Jaffna College Alumni Association has elected Mr. R. D. Karunairajan as the Alumni representative on the Board of Directors of the College.

Mr. S. A. Balaratnam, the Secretary of the JCAA writes that the election was closely contested.

At the Annual Meeting of the JCAA to be held on 8-8-81, *six* minor employees of Jaffna College who have completed 25 years of service and have retired, will be felicitated.

*In brief*

- *University admissions* will soon be finalised. It is learnt that a total of 5020 students would be admitted to the six Universities and the two University Colleges in Sri Lanka. 400 will be admitted to the three Medical Faculties, 1200 to the Engineering and Science Faculties and 2100 to the Art Faculty.
- *Tapering off*: According to statistics provided by the Department of the Registrar of motor vehicles, the licensing of motor cycles has shown a sharp decline in Sri Lanka, to almost fifty per cent. One reason attributed to the drop is the increase in the number of motor cycle accidents. Another reason is that the private coaches provide cheap and comfortable means of transport at all hours, making a motor cycle an unnecessary luxury for the average wage-earner.
- *A Three Member Committee* will, it is learnt be appointed to decide on the quantum of compensation to be paid to people affected by the loss of life and property in Jaffna during the "insurgency" (May 31st to June 6).
- *The Court of Appeal*, comprising Justice Colin Thome (President) and Justice D. Atukorale has issued notice on the Attorney General, the Government Agent (Jaffna) and the Election Commissioner among others in the application challenging the Jaffna DC Elections. Notice is returnable on 22-9-81.

  The Petitioner is Mr. Raja Rajeswaran Thangarajah, Attorney at Law and President of the Analytical Guild.
- *Mr. John Clegg* the British Pianist who is an Examiner for the Associated Board of the Royal Schools of Music is now in Sri Lanka. He is also Senior Lecturer in *Mathematics* at the University of Lancaster. Music and Mathematics go well together, it is said, as Einstein has proved. It is good for our mathematics teachers in schools and Universities to try to attend music lessons, if they have not already done so.
- *Sri Lanka's Population*: According to the preliminary report of the March 1981 Census released on 4-7-81 Sri Lanka's population stands at 14,850,001. The total male population is 7,538,128 while the total female population is 7,310,873.

*Church News from Abroad*

**Bossey Graduate School**

The 30th session of the Graduate School in Bossey (15-10-81 to 28-2-82) will have as its theme "Created in the Image and Likness of God".

The struggle to be "truly human" is a central one for vast numbers of people in the contemporary world. The Bossey school will explore the major understandings of human nature found in the Christian Churches and different types of societies.

**Good News Bible in Chinese**

The publication of a new translation of the Bible into Chinese in Singapore has been hailed as a major step forward in bringing the Good News to more than a quarter of the world's population.

It is the *first* translation made by Chinese Christian scholars using the new principle of "dynamic equivalence" (producing precisely the same meaning for modern readers as the text had for its original readers). Most translations are not effective for more than 10 years. According to Dr. Moses Hsu who worked on this project for eight years, "we will have to start the new translation in 10 years time".

*Education*

## English Association helps AL Students

A Series of Programmes on English A Level texts in Sri Lanka have been organised by the English Association for the benefit of AL Students offering English as a subject.

On July 15, at Lionel Wendt Theatre there was the first of the series on *The Victorian Conscience* — a comparison between Dicken's "Hard Times" and "Silas Marner" with Readings by Richard de Soysa and Chandi Kadirgamar.

"The genre of the Short Story" is being dealt with, in four programmes on *Aspects of the American Short Story*. This series commenced on July 17.

A Service of Thanksgiving

for the life and ministry of the late

**Rev. Samuel Ponniah Vijayaratnam**

(Presbyter, Jaffna Diocese of the C. S. I.)

*will be held on Friday the 7th of August, 1981 at 4-30 p. m. at the Tellippallai Church.*

*Your presence and prayers will be greatly appreciated.*

**Rev. Sam Thampoe,**

*Secretary, J. D., C. S. I.*

# உதயதாரகை

# UTHAYATHARAKAI

Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ்.] [வெள்ளிதோறும் வெளிவருவது.

"நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவம் எந்தக் குலத்துக்கும் இழிவாம்"


## தாரகை ஒளி

உலகத்தின் சோதனைகளுக்கு உட்படாமலும், அதனிடம் பாடம் படிக்காமலும், ஒருவன் நிறைவுள்ள மனிதனாக விளங்கமுடியாது. அனுபவம் ஊக்கமாக உழைப்பதிலிருந்து கிடைக்கிறது. காலத்தின் வேகம் அதைச் செம்மைப் படுத்துகிறது. — ஷேக்ஸ்பியர்.


மலர் 141 ] 24—7—1981 [ இதழ் 30


## ஒரு தசாப்தம் முடிகிறது!

தென்னிந்திய திருச்சபை யாழ்ப்பாண அத்தியட்சாதீனத்தின் வரலாற்றில் அடுத்த மாதத்துடன் ஒரு காலகட்டம் முடிவடைகிறது. பேராயர் குலேந்திரன் காலகட்டத்தை தாண்டி, பேராயர் அம்பலவாணர் காலத்தைக் கடந்த ஒரு புதிய தலைமைக்குள் நமது ஆதீனம் வரவிருக்கிறது.

1971ம் ஆண்டு நமது பேராயராகப் பதவியேற்ற மகாகனம் D. J. அம்பலவாணர் 1981ம் ஆண்டு செப்டம்பர் மாதம் கர்னாடக அத்தியட்சாதீனத்தின் பேராயராகப் பதவியேற்க விருக்கின்றார். கடந்த பத்து வருடங்கள் நமது ஆதீனம் சந்தித்த பிரச்சினைகள் அநேகம். சமதரைகள், தெளிந்த நீரோடைகள், பசுஞ்சோலைகள் கொடிய வனாந்தரங்கள், மரண இருளின் பள்ளத்தாக்குகள் எல்லாவற்றையும் கடந்து வந்திருக்கின்றோம் இந்த நீண்ட பயணத்திலே நமது புனிதத் தேரின் சாரதியாக விளங்கியவர் பேராயர் அம்பலவாணர்.

மாறுதல்களும் சோதனைகளும் நிறைந்த இந்தக் காலகட்டத்திற்கு பேராயர் அம்பலவாணர் ஏற்றதொரு தலைவனாக விளங்கினார். இந்தியா சுதந்திரமடைந்து குறுநில மன்னர்கள் இந்தியப்பேரரசுக்குள் வராது குழப்பம் விளைவித்த காலை, இந்தியாவின் துணைப்பிரதமராக விளங்கியவர் சர்தார் வல்லபாய் பட்டேல். இவரை இரும்பு மனிதர் என்று இந்திய வரலாற்று ஏடுகள் போற்றுகின்றன சதிகளையும் எதிர்ப்புக்களையும் வெற்றிகொண்டு நவ இந்தியாவுக்கு அத்திபாரமிட்டார் பட்டேல். பேராயர் அம்பலவாணரின் மனவுறுதியும், திடசங்கற்பமும், சாதனை வேட்கையும் நமது ஆதீனத்தின் மிகப் பலம் வாய்ந்த சக்தியாக இருந்தன. குழப்பங்கள் கொந்தளிப்புகள், குறும்புகள், மத்தியில் அசைவில்லாத மாமலையாகப் பிரகாசித்தார். அலை அலையாக வந்த இமாலயப் பிரச்சினைகளையெல்லாம் உறுதியோடு எதிர் கொண்டு தீர்வு கண்டார்.

கடந்த பத்து வருடங்களில் நாம் குறும்புகளையும் பிரச்சினைகளையும் மட்டுமன்றி அரசியல் நெருக்கடிகளையும் பொருளாதார இடர்பாடுகளையும் கண்டிருக்கின்றோம். தென்னிந்திய திருச்சபையின் யாழ்ப்பாண அத்தியட்சாதீனம் என்ற அமைப்புக்கு ஒரு தனியான பாதையும் தனித்துவமான மாற்றம் பேணப்பட்டு வந்துள்ளன. தென்னிலங்கை மக்கள், இந்து சகோதரர், உரோமன் கத்தோலிக்கர் ஏனைய கிறிஸ்தவர்கள், இந்திய கிறிஸ்தவர் முதலிய பலதரப்பட்ட சக்திகளின் மத்தியில், எமக்கென ஒரு பாதை அமைக்கப்பட்டிருக்கின்றது. எந்த ஒரு சக்தியுடனும் நாம் அமிழ்ந்து அழிந்துவிடாது தனித்துவம் பேணப்பட்டிருக்கின்றது. இத்தகைய சிறப்புக்கு நாம் பேராயர் அம்பலவாணருக்கு என்றும் கடமைப்பட்டவர்களாக இருக்க வேண்டும். மூதறிஞர் இராஜாஜியை "The most clear headed person" என்று ஒரு பத்திரிகை ஆசிரியர் வர்ணித்தார். பேராயர் நமது ஆதீனத்தின் கலங்கரை விளக்கம் மிகவும் தெளிந்த உள்ளம் படைத்த மனிதர். பலவித வேண்டுகோள்கள், தீர்மானங்கள், கோரிக்கைகள், எல்லாவற்றையும் சமாளித்து நமது ஆதீனம் என்னும் இரதத்தை சரியான பாதையில் செலுத்தி வந்துள்ள பெருமை அவருடையது.

புதிய துறைகள் பலவற்றில் நாம் ஈடுபட்டு வருகின்றோம். நற்செய்திப்பணி உணவு உற்பத்தி போன்ற துறைகளில் பாரிய அளவில் ஈடுபட்டு உழைத்து வருகின்றோம். இவை திருச்சபை இன்று செய்ய வேண்டிய மகோன்னத கடமைகள். இவற்றிற்கு அழுத்தம் கொடுத்து இவைதாம் இன்று நமது முக்கிய கடமைகள் என உணரவைத்துள்ளமை பாராட்டிற்குரியதொன்றாகும்.

பேராயர் நம்மைவிட்டு நீங்குகின்றார்; ஆனால் தென்னிந்திய திருச்சபையையல்ல. இது நமக்குத் திருப்தியளிக்கிறது. பத்து வருடம் பணியாற்றியவுடன் போகிறார்; ஆனால் பலம்வாய்ந்த அத்திபாரத்தை நமக்கு அளித்துவிட்டு இது நமக்குத் தென்பு தருகிறது. புதிய ஆதீனத்தில் மேலும் பயனுள்ள பணியாற்ற இறைவனை வேண்டுவோமாக.

## நீ மறுபடியும் பிறக்க வேண்டும்

கிறிஸ்தவம் ஒரு புதிய மார்க்கம். அது ஒரு புதிய பிறப்போடு ஆரம்பமாகிப் புதிய பூமியோடு முடிவடைகிறது. பாவியான மனிதனில் உதயம் பெற்று, மறுபிறப்பென்னும் மாற்றத்தினூடாய் ஒரு புதுமையான சிருஷ்டியில் சங்கமமாகிறது. அது தரும் வாழ்வு அழிவில்லாத புதிய நித்திய ஜீவன். இதைப்பெற்றுக் கொள்பவர்களுக்குக் கொடுக்கப்படுவது ஒரு புதிய பெயர் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட புத்தகம் ஒரு புதிய ஏற்பாடு. அவரவனோடு கடவுள் செய்து கொள்ளும் உடன்படிக்கை ஒரு புதிய உடன்படிக்கை. அவர்கள் நுழைந்து போவதற்குக் காட்டப்பட்ட பாதையும் புதுமையானது: "புதியேற்பாட்டின் ஒடுக்கமான வாசல்". அவர்கள் பாதையும் அனுபவமும்கூடப் புதியன. "இதோ நான் எல்லாவற்றையும் புதிதாக்குகிறேன்" என்று வெளிப்படுத்திய ஆண்டவர் அனுதினம் இதை நிறைவேற்றிக் கொண்டே இருக்கிறார்.

ஆம்; கிறிஸ்தவனாகும் ஒருவன் ஒரு புதிய மனிதனாக அல்ல, யாவுமே புதிதான ஒரு புதுச் சிருஷ்டியாகப் பரிணமிக்கிறான். யாவுமே புதுமை. அவன் மாத்திரமல்ல. ஒரு கிறிஸ்தவன் காண்பதும், கேட்பதும், நுகர்வதும், ஏன்?, அவன் சூழலும் கூட அவனுக்குப் புதுமையான, சுக அனுபவத்தைக் கொடுக்கின்றன. இந்தப் புதுமைக்கு ஆரம்பமும் அவசியமும், ஊற்றும் பிறப்பிடமும் ஒரு "புதிய இருதயம்" தான். எசேக்கியேலின் புத்தகத்தில் இது அழகாகக் கூறப்பட்டிருக்கிறது." "உங்களுக்குப் புதிதான இருதயத்தைக்கொடுத்து உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிட்டு, கல்லான இருதயத்தை உங்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப் போட்டு, சதையான இருதயத்தை உங்களுக்குக் கொடுப்பேன்" எசேக்; 36 : 20 கிறிஸ்தவம் என்னும் புதுமைக்குட்பிரவேசித்தவர்களுக்குப் பட்டம் பதவியோ, ஞானஸ்நானமோ, ஊழிய அதிகாரமோ அல்ல; இந்தப் புதிய மாற்றம் தான் அடையாளம் நீ மறு படியும் பிறக்கவேண்டும். பழையவைகளெல்லாம் ஒழிந்து போயின. யாரையும் வெறுத்தொதுக்காத, குரோதம் பாராட்டாத, எதையும் விளங்கி அடக்கிக் கொள்ளக்கூடிய விசாலமான, மென்மையான, இருதயம் தான் கிறிஸ்தவனின் அடையாளம்.

"நீர் என் இருதயத்தை, விசாலமாக்கும் போது நான் உம் கற்பனைகளின் வழியாக ஓடுவேன்"—சங் 119. 22. நீதிமானாகக் கருதப்பட்ட நிக்கோதேமுவுக்கு ஆண்டவர் சொன்னார்; "நீ மறுபடியும் பிறக்கவேண்டும்". "ஒருவன் மறுபடியும் பிறக்காவிட்டால் தேவனுடைய இராஜ்யத்தைக்காண மாட்டான் என்று மெய்யாகவே, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" — யோ 3:3. நீ மறுபடியும் பிறக்கவேண்டும்; முற்றாக மாறவேண்டும்.

சபையின் தலையாய கடமை சுவிசேஷம்கூறல். பிறனுக்கு நான் சுவிசேஷத்தை எடுத்துச் சொல்லுமுன் அது எனக்குள்ளே வேரூன்றித்துளிர் விட்டு மறுபிறப்பைத் தரவேண்டும். மற்றவர்கள் முன் முற்றிலும் புதுமையான புதுச் சிருஷ்டியாய் எழுந்து நிற்கும் பொழுதுதான், அவர்கள் என்னை உற்று நோக்கி ஆச்சரியத்தோடு செவிமடுப்பார்கள். கிறிஸ்தவரல்லாத சமுதாயம் ஆச்சரியத்தோடும் ஆவலோடும் உன் கிட்ட வந்து, உற்று நோக்கித் தொட்டுப் பார்க்கிறதா? அன்றேல் அக்கறையின்றி விலகி ஓடுகிறதா?.

'நீ மறுபடியும் பிறக்க வேண்டும்! மறு பிறப் படைந்து சுவிசேஷத்தைப் பிரசங்கித்த பரிசுத்த பவுல் 1 தெசலோனிக்கேயர் 2-ம் அதிகாரத்தில் சொல்வதைக் கேளுங்கள்: "நீங்கள் அறிந்திருக்கிறபடி எங்கள் போதகம் வஞ்சகத்தினாலும் துராசையினாலும் உண்டாயிருக்கவில்லை, அது கபடமுள்ளதாயும் இருக்கவில்லை, நாங்கள் ஒருக்காலும் இச்சகமான வசனங்களைப் பேசவில்லை. பால் கொடுக்கிற தாயானவள் தன் பிள்ளைகளைக் காப்பாற்றுகிறது போல உங்கள் மேல் வாஞ்சையாயிருந்து தேவனுடைய சுவிசேஷத்தை உங்களுக்கு சொல்லி இரவும் பகலும் வேலை செய்து சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தோம்.", விசாலித்த இருதயத்திலிருந்து அன்புருவில் ஆதரவான வார்த்தையாய் பிரவாகித்து பாயும் சுவிசேஷ மேன்மையைப் பவுலின் வார்த்தைகளில் காண்கிறோம்.

மறு பிறப்பென்பது ஒரு பூரணமான மாற்றம்; பரிசுத்தமான மாற்றம். உன்னை இருதயத்தில் நிறைந்து வியாபித்து வெளியரங்கமாய் யாவரும் நம்மை ஆச்சரியத்தோடு ஓர் புதிய விலங்கைப் பார்ப்பது போல் நிமிர்ந்து கூர்ந்து பார்க்கும்படி ஏற்படும் மாற்றம். இந்த மாற்றத்தைப் பட்டமோ, பதவியோ, உயர்கல்வியோ, வேற்று நாட்டு அனுபவமோ பெற்றுத்தரமுடியாது. பலத்தி


(3-ம்பக்கம் பார்க்க)


## வத்திக்கான்மேல் குற்றச்சாட்டு

சீனாவின் உள்நாட்டு விவகாரங்களில் வத்திக்கான் அநாவசியமாய்த் தலையிடுகிறதெனச் சீனாவிலுள்ள கத்தோலிக்கச் சபை குற்றஞ்சாட்டியுள்ளது. சீனாவின் தென்பகுதி ஆதீனமொன்றிற்குப் பிரதம அத்தியட்சகராக அதி. வண. டொமினிக் ராங் என்பவரைச் சென்ற மாதம் வத்திக்கான் நியமித்ததையடுத்துச் சீனாவின் மூன்று கத்தோலிக்கத் தாபனங்கள் கடும் ஆட்சேபனை தெரிவித்தன. சபையின் ஆலோசனையைக் கேட்காமல் இந்த நியமனம் செய்யப்பட்டதெனவும், சீனச் சபையின் மேல் அதிகாரம் செலுத்தி குடியேற்ற நாட்டு ஆட்சி போன்ற ஒரு நிலைக்குள் அதைக் கொண்டுவர வத்திக்கான் தலைமைப்பீடம் முயற்சிக்கிறதென்வும் குற்றஞ்சாட்டிய இத்தாபனங்கள் வத்திக்கானிலிருந்து வரும் எல்லா வகையான தலையீடுகளையும் மோசடிச் செயல்களையும் தாம் தீவிரமாக எதிர்த்துக்கொள்ளுமெனக் கூறியுள்ளன.

## தொழில் அபிவிருத்தியில் தாழ்ச்சி

கடந்த சில ஆண்டுகளாக மிகத் தீவிர வளர்ச்சியைக் கண்டு வந்த தொழில் அபிவிருத்தியில் இந்த ஆண்டு பெருமளவான தாழ்ச்சி ஏற்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது. வர்த்தக வங்கிகள் கொடுத்துவந்த கடன் அளவு மட்டுப்படுத்தல், முதலீடு இல்லாமை, மின்சக்தித் தட்டுப்பாடு முதலியன பிரதானமான காரணங்களாய்க் கூறப்படுகின்றன. மிகவும் அதிகமாய்ப் பாதிக்கப்படக்கூடியது ஏற்றுமதிக்குரிய ஆடை உற்பத்தியாகும். சென்ற ஆண்டில் ஆடை உற்பத்திக் குறைவினால் புறநாட்டு வருவாயில் மிகுந்த குறைச்சல் ஏற்பட்டது. இதன் நிமித்தமாகவும் புறநாட்டு இறக்குமதியாளர் தொகை குறைந்ததினாலும் ஆடை உற்பத்தித் தொழிலில் இம்முறையும் பாதிப்பு ஏற்படக் கூடுமெனக் கூறப்படுகிறது.

1980-ம் ஆண்டிலும் புறநாட்டு ஸ்தாபனங்களுடன் இணைந்ததாய்ப் பெருந் தொழிற்சாலைகள் பலவும் நாட்டிலே நிறுவப்பட்டதன் காரணமாக, அவற்றோடு போட்டியிட முடியாத சிறு தொழிற்சாலைகளிற் பல மூடப்படவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. குறிக்கப்பட்ட சில பொருட்களில் இறக்குமதியளவு சுமாராக இருந்த காரணத்தினாலும் இப்பொருட்களை உற்பத்தி செய்து வந்த உள்நாட்டுத் தொழிற்சாலைகள் பல அதிகமாய்ப் பாதிக்கப்பட்டன எனவும் கூறப்படுகிறது.

## செய்திகளின் சாரம்

### வடமாகாணத்தில் இராணுவப் பிரிவு

சனங்களை விசாரிக்கும் உரிமையும் காவல்துறைக்குரிய பிற அதிகாரங்கள் சிலவும் கொண்ட இராணுவப் பிரிவு ஒன்றை வட பகுதியில் நிரந்தரமாய் நிறுத்துவதற்கு அரசாங்கம் ஆலோசிக்கிறது. அவசரகாலநிலை பிரகடனப்படுத்தப்பட்டால் மட்டுமே சாதாரணமாக இராணுவம் கடமைக்கழைக்கப்படுமெனினும் இந்த விசேட இராணுவப் பிரிவு தேவை காணும்போதெல்லாம் வீதிகளிற் சென்று கடமையாற்றவும் தனிப்பட்ட விசாரணைகளை மேற்கொள்ளவும் உரிமையுடையதாயிருக்கும் என அறியப்படுகிறது.

* * *

### மின் அபிவிருத்தி

அடுத்த மூன்று ஆண்டுகளுக்குள் நாட்டின் மின் உற்பத்தியையும் விநியோகத்தையும் விஸ்தரிப்பதற்கான மூன்றாண்டுத் திட்டம் ஒன்றை இலங்கை மின்சாரச் சபை வகுத்துள்ளது. இதன் செலவு 200 கோடி ரூபாவாகும். இத்தொகையில் 66 கோடி ரூபாவைக் கடனாகக் கொடுத்துதவ உலக வங்கியும் சவுதி அரேபிய நிதி நிறுவனம் ஒன்றும் முன்வந்திருக்கின்றன.

* * *

### நிரந்தர நியமனம் கிடைக்கவில்லை

சென்ற ஆண்டில் அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்ட 723 தோட்டப் பாடசாலைகளிலும் கடமையாற்றும் ஆசிரியர்களில் கண்டிக் கல்விப் பிரிவைத் தவிர்ந்த ஏனைய பத்துப் பிரிவுகளிலும் ஒரு சிலருக்கு மாத்திரமே இதுவரை நிரந்தர நியமனம் கொடுக்கப்பட்டுள்ளது. இதைக் குறித்து கல்வி அமைச்சின் தோட்டப் பாடசாலைப் பிரிவு ஆட்சேபனை தெரிவித்துள்ளது.

* * *

### தமிழ் உபயோகம்

பிரதேச அபிவிருத்தி அமைச்சினால் சமீபத்தில் கொண்டுவரப்பட்ட ஒரு திட்டத்தின்படி வடக்கு கிழக்கு மாகாணங்களில் அரசாங்கத் திணைக்களங்கள், ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் சகல அறிக்கைக் கோப்புகளும் பிறபத்திரங்களும் தமிழ் மொழியிலேயே வைத்துக் கொள்ளப்படும். எனினும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரும்பினால் இதற்காக ஆங்கிலமும் சிங்களமும் கூட உபயோகிக்கப்படலாம்.

* * *

### காணியும் கல்யாணமும்

மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் குடியேறுபவருக்கு அரசாங்கம் காணிகளை வழங்கத் திட்டமிட்டிருக்கிறது. எனினும் விவாகமானவர்களே காணிகளுக்கு விண்ணப்பிக்கலாமென்ற நிபந்தனையின் நிமித்தமாகப் படிக்கும் மாணவர் உட்படப் பலரும் விவாகப் பதிவுகள் செய்து கொண்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

## நீ மறுபடியும் பிறக்க......

( 2-ம் பக்கத் தொடர்ச்சி )

னாலும் பராக்கிரமத்தினாலுமல்ல கிறிஸ்துவினிடமிருந்து பெறும், ஆவியின் அனுபவத்தினால் தான் இது ஆகும்.

"கண்ணுக்குக்கண்: பல்லுக்குப் பல்" என்ற பழைய ஏற்பாட்டின் விசாலமான பாதையிலிருந்து கடந்து "ஒருவன் உன் வலது கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தையும் கொடு" என்ற புதிய ஏற்பாட்டின் ஒடுக்கமான வாசலுக்குள் நாம் பிரவேசிக்கக்கூடுமாயின் நம் இருதயம் விசாலித்து மேன்மையடைந்திருப்பதை நாம் உணரலாம். பழையேற்பாட்டின் கடினமான நியாயப் பிரமாணிகள், ஆசரிப்பு முறைகள், ராஜாக்கள், தீர்க்கதரிசிகள், அதிகாரிகள், ஞானிகள், நியாயாதிபதிகள், முறைப்படி கட்டப்பட்ட பளிங்கு மண்டபங்கள் — இவையெல்லாவற்றிலுமிருந்து விலகிப் புதியேற்பாட்டின் எளிமை நிறைந்த கலிலேயாக் கடலோரம் உலாவி, கந்தை பொதிந்த மீனவர்களையும், எளிமையான விதவைகளையும், நோயாளிகளையும், தண்ணீர் மொள்பவர்களையும், கண்ணீர் விடுபவர்களையும், ஊனர்களையும், சப்பாணிகளையும் நாம் சந்திக்கும்போது, எழிமையின் தெய்வீகப் புதுமைக்குட் பிரவேசிக்கிறோம். இத்தனை சாதாரண மக்களையும் நியாயப் பிரமாணத்துக்கப்பாற்பட்ட முறையில் உள்ளன்போடு அணுகி நேசித்து அவர்களோடு உண்டு, உறங்கி, உலாவி, உறவாடி உதவி செய்யக்கூடியதாக அந்த நசரேயராகிய கிறிஸ்துவின் உள்ளம் விசாலித்திருந்தது.

மறுபடியும் பிறவாதோர் நிமித்தம் சபை இன்றும் பழையேற்பாட்டிற்குள் சுற்றி வருகிறது. "பழையவைகளெல்லாம் ஒழிந்து போயின. இதோ நான் எல்லாவற்றையும் புதிதாக்குகிறேன்" என்கிறார் ஆண்டவர் ஆகவே நீ மறுபடியும் பிறக்க வேண்டும். பழமையை விட்டுப் புதுமைக்குள் பிரவேசிக்க வேண்டும்.

> "தேவனே, என் இருதயத்தை ஆராய்ந்து அறிந்து வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து நித்திய வழியிலே என்னை நடத்தும்."

புரட்சியினாலல்ல; புதிய திட்டங்களைத் தீட்டுவதினாலல்ல; மறுபடியும் பிறப்பதினாலேயே இப்புதுமைக்குள் பிரவேசிக்கலாம்.

— G. S. V.

* * *

### தருவுக் கொரு கற்பகம்

பனை மரத்திலிருந்து உற்பத்தி செய்யப்படும் உணவுப் பொருட்களையும் சாரவு ஓலையினாற் செய்யப்படும் பெட்டிகள், விசிறிகள், தொப்பிகள் முதலியவற்றையும் மக்கள் எளிதில் வாங்கிக் கொள்வதற்கு உதவியாக மாவட்ட அபிவிருத்தி அமைச்சு ஒரு விற்பனை நிலையத்தைக் கொழும்பிலே ஆரம்பித்துள்ளது. பனம் பொருட்களை விட மாம்பழம், பலாப் பழம், திராட்சைப் பழம் முதலியவற்றிலிருந்து தயாரிக்கப்பட்ட பிற உணவுப் பண்டங்களும் பானங்களும் கூட இங்கே பெற்றுக் கொள்ளப்படலாம் இந்த நிலையத்தின் பெயர் கற்பகம்.

## கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மாட்சிமை

[ கலாநிதி கனம் ஜேம்ஸ் மேதர் அவர்கள் ஆங்கிலத்தில் எழுதியது. தமிழாக்கம்: திருமதி இசபேல் அற்புதநாதன். ]

[ 10-7-81 இதழ்த் தொடர்ச்சி ]

"இயேசு, நானே நல்ல மேய்ப்பன், நல்ல மேய்ப்பன் தன் ஆடுகளுக்காகத் தன் உயிரைக் கொடுக்கிறான்" என்று கூறினார். அவர் அன்பு என்றால் தியாகம் என்பதை விளக்கினார். தனது சிநேகிதர்களுக்காகத் தன் சொந்த ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் பார்க்கப் பெரிதான அன்பு எங்குமே இல்லை என்று இயேசு விளக்கினார். யோவான் 12:24ல் கூறப்பட்டிருக்கிறபடி 'கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும்; செத்ததேயாகில் மிகுந்த பலனைக் கொடுக்கும்.'

இயேசு தான் சிலுவையில் மரிக்க வேண்டியது ஒரு கட்டாயம் என்பதை உணர்ந்தார். யோவான் 3:14-15ல் கூறப்பட்டிருக்கிறபடி சர்ப்பமானது மோசேயினால் வனாந்தரத்திலே உயர்த்தப்பட்டது போல மனுசகுமாரனும் தன்னை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு உயர்த்தப்பட வேண்டும்' என்று நன்றாகத் தீர்மானம் பண்ணிக் கொண்டார்.

இவ்வுலகஜீவியத்திலே மற்றவர்களின் நன்மைக்காக, முன்னேற்றத்திற்காக நாங்கள் தன்னலமற்ற தியாக சேவை செய்ய வேண்டும்.

இயேசு ஓர் உதவியற்ற குற்றவாளியாக தனது பகைவர்களின் கையில் மரிக்கவில்லை. ஆனால் யோவான் 10:17-18ல் சொல்லப்பட்டிருக்கிறபடி "நான் என் ஜீவனை மறுபடியும் அடைந்துகொள்ளும் படிக்கு அதைக் கொடுக்கிறேன். ஒருவனும் அதை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ள மாட்டான் நானே அதைக் கொடுக்கவும் மறுபடியும் பெற்றுக் கொள்ளவும் எனக்கு அதிகாரமுண்டு" என்று கூறினார். ஆதியாகமம் 3:13, அப்போஸ்தலர் 2:23; ரோமர் 8:29ல் கூறப்பட்டிருக்கிறபடி தேவன் முன்குறித்தபடி இயேசு சிலுவையில் மரித்தார்.

இயேசுவின் மாட்சிமை தேவனின் சித்தத்தை நிறைவேற்றுவதற்கு தனக்கு நேர்ந்த அவமானம், நிந்தை, பாடு, நோ, இழிவு யாவற்றையும் சகித்து சிலுவை மரணத்தை நிறை வேற்றியதிலிருந்து நன்கு புலப்படுகிறது. இதுவே அவரது மாட்சிமையைக் காட்டிய பெரிய இரகசியமாகும்.

(8) பேதுரு இயேசுவை மறுதலித்து ஜனங்களுக்கு முன் தான் இயேசுவை அறியேன் என்று சத்தியம் பண்ணி நம்பவைத்த பின்னும் அவன் மனங்கசந்து அழுது மனந்திரும்பி மறுபடியும் இயேசுவிடம் திரும்பி வந்தபோது இயேசு பேதுருவை ஏற்றுக் கொண்ட விதத்தைப் பாருங்கள். இதுவும் இயேசுவின் மாட்சிமையைக் காட்டும் இன்னும் ஒரு வழி.

இயேசுவை ஜனங்கள் பிடித்துக் கொண்டுபோய் பிலாத்துவின் முன் நிறுத்தியபோது பேதுரு தான் இயேசுவை அறியவில்லையென்றும் தான் அவருடனே கூட இருந்தவனல்லன் என்றும் மறுதலித்தான் என்று லூக்கா 22:57; மாற்கு 14:68; யோவான் 18:25; முதலிய வசனங்கள் கூறுகின்றன. ஆனால் ஏற்கனவே பேதுரு இயேசுவைப் பார்த்து 'நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து' என்று மத்தேயு 16:1g லும் 'நான் உம்மோடே கூட மரிக்க வேண்டியதாயிருந்தாலும் உம்மை மறுதலிக்க மாட்டேன்.' என்றும் மத்தேயு 29:35 இலும் கூறியிருந்தான் என்றும் அறிவோம். ஆனால் பின்பு அதே பேதுரு மத்தேயு 26:74ல் நாம் பார்க்கிறபடி தான் இயேசுவோடே கூட இருக்கவில்லையென்றும் தான் இயேசுவை அறியேன் என்று சொல்லி மறுதலித்து சபிக்கவும் சத்தியம் பண்ணவும் தொடங்கினான்", என்று அறிவோம். ஆனால் பேதுரு மறுதலித்த பின்னும் அவன் மனந்திரும்பி இயேசுவிடம் திரும்பி வந்தபோது இயேசு அவனை ஏற்றுக்கொண்ட விதம் இயேசுவின் பெருந் தன்மையையும் மாட்சிமையையும் காட்டுகிறது. சிலுவையில் அறையப்பட்டு மரித்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்த ஆண்டவர் காரியத்தைப் போய் சீசர்களுக்கும் பேதுருவிற்கும் அறிவியுங்கள் என்றார். மாற்கு 6:7ல் இதை நாம் காண்கிறோம். குறிப்பாக அவர் பேதுருவின் பெயரையும் குறிப்பிட்டது அவர் பேதுருவின் மேற்கொண்ட அன்பை விளக்குகிறது. இயேசுவின் அன்பு ஒருவரும் அவருடைய அன்பிலிருந்து விடுபட முடியாத நிலையில் இருந்தது. எவ்வளவு கெட்ட மனிதனையும் தேவனுடைய அன்புக் கரங்கள் விரித்து அணைப்பவையாயிருந்தன. அவர் எல்லோரையும் பார்த்து வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் என்று மத்தேயு 11:28ல் கூறப்பட்டபடி வருந்தி அழைத்தவராகவேயிருக்கிறார். இவ்வண்ணமே அவர் பேதுருவையும் அரவணைத்துச் சேர்த்துக்கொண்டமை அவரின் மாட்சிமையைக் காட்டுகின்றது.

(9) அவர் ஒரு பெரிய சீர்திருத்த வாதியும் மனிதர்களின் ஜீவியத்தை மாற்றியமைக்கக் கூடியவருமாமே. லூக்கா 19:1-10ல் பார்க்கிறபடி சகேயு பிழையான வழிகளிற் பணத்தைச் சம்பாதித்த ஓர் ஐசுவரியவான். இயேசு எப்படிப்பட்டவரோ என்று அவரைப்பார்க்க ஆசையாயிருந்தான். அவ்வண்ணமே இயேசுவும் அவரைப்பிடித்து மறுரூபமாக்க விரும்பினார். கண்டார், தான் அவன் வீட்டிலே அவனுடனே தங்க விரும்புகிறேன் என்று சொன்னார். சில நிமிடங்களில் தானே சகேயு மாறிவிட்டான். உடனே சகேயு "ஆண்டவரே! என் ஆஸ்திகளிற் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன். நான் ஒருவனிடத்தில் எதையும் அநியாயமாய் வாங்கிய துண்டானால் நாலத்தனையாகத் திரும்பச் செலுத்துகிறேன்," என்று சொல்லி மனந்திரும்பினான். இதனால் அவன் தனக்கென்று ஒன்றையும் மீதியாய் வைத்திருக்கவில்லையென்றும் பணத்தைப் பற்றிய ஆசை மாறிவிட்டதென்றும் ஐசுவரியவான் தரித்திரனாக வாழ விரும்பினான் என்றும் பார்க்கிறோம். கடவுள் அற்ற ஐசுவரிய வாழ்க்கை வாழ்வதிலும் பார்க்க கடவுளோடு ஐக்கியப்பட்டு வறியவனாக வாழ விரும்பினான்.

*EDITORIAL*

## The DDC — A Flaming Vision

Monday, July 20th, marked an important event in our annals. The day saw the Inauguration of the *Jaffna District Development Council* at the New Secretariat Jaffna.

The event symbolises as the Chairman of the Jaffna District Development Council has loftily noted, "a turning point" in the history of the Tamil speaking people inhabiting the northern part of the country.

The prow of our 'vessel' is now turned, as it were, towards a new goal which Tamil leader, *Thanthai* (meaning 'father') Chelvanayakam had envisioned many years ago and for which he had laboured all his life.

It is also not without significance that *the Jaffna District Development Council* has been inaugurated under dark clouds of despair mobilising over the northern horizon and an agonising suspense hanging heavy over the country.

A District Development Council as Prof. A. J. Wilson (one of the architects of our *Devolution Scheme*) has pointed out, is a mini-parliament and in this capacity it is possible, we believe, for such a Council, with the approval of the government, to seek such foreign aid as is necessary for its "development".

The CDN of 10-7-81 (Page 9) has a news item which in the context of certain current acrimonious political controversies in our country, has considerable significance.

"*Moratuwa is to be linked to Suito Osaka and developed as a twin city of Suito, Japan*" says the news report. The plan is the brain wave of the M. P. for Moratuwa who had visited Japan. The Mayor of Moratuwa too, had subsequently on an invitation from the Mayor of *Suito*, toured Osaka and Suito.

The visit of a team from Japan to Moratuwa recently has put the seal of approval of both governments in the linking of these two "cities" — Suito (in Japan) and Moratuwa (in Sri Lanka) for development purposes.

We welcome this trend of adoption of a district in Sri Lanka by its counterpart in an affluent country (with the blessings of the Central government in both countries) so that development aid would be conceived not only on a national scale as it is done at present but also at Municipal and District levels.

New and still uncharted 'winds' are thus blowing in this country particularly in the sphere of local development. There should be no reason why we should *not* expect these 'winds' to blow over the Northern shores.

The Colombo District Council Inaugural meeting as reported in the CDN of 22-7-81, underlines two fundamental aspects of District Development Council Administration.

Colombo's District Minister Weerasinghe Mallimarachchi said that they should not make the Council "*a talking shop*".

He also welcomed the *Opposition Members* in the Colombo DC and said that the Council *accepted the Opposition as an integral part of the administration* — [The JVP is represented in the Colombo District Council].

As the District Development Council is a mini-parliament, it would be incumbent on all members of Parliament to see that Parliament proceedings set the tone and tenor for the District Council meetings.

The long cherished dream of the Jaffna District Council is now a reality. In some matters, it may be useful for us to take our cue from other Development Councils in the country while in certain other matters it will become necessary for us to plough a lone furrow, with due deference to our own culture and traditions.

But one thing we can be proud about. Suffering matures people. The emotional and psychological traumas we have suffered will not be in vain. For, as the French philosopher and propounder of Existentialism, Jean-Paul Sartre has pointed out:—

"*Life begins on the other side of despair*"

*IN BRIEF*

○ *The Express Train Service* which leaves Colombo Fort at 9.05 p. m. for Kankesanthurai, which was cancelled for some time has now been restored. It will operate on week-ends only.

○ *Inter-School Shakespeare Contest (Girls' Group)*. Bishop's College won the above contest organised by the Rotary Club and the Colombo YMCA. The School also won the Best Actress Award for the second year in succession. The scene presented was from "Midsummer Nights' Dream. Kamini Hapugalle won the Best Actress Award for her performance of *Bottom*.

○ *Death of Modern Novelist.* — Navelist Pamela Hansford (74) well known as a strong opponent of permissiveness died in London recently. She is the widow of writer C. P. Snow, and has to her credit 17 novels many of which had love as the central theme.

*For the Record*

### The Chairman's Address

[At the Inaugural Meeting of the Jaffna District Development Council on 20-7-81.]

I derive immense pleasure in having been favoured with the opportunity of presiding over the Inaugural Meeting of the National Development Council of the Jaffna District — *a Council* which appears to mark a turning point in the history of the Tamil speaking people in this district.

**A Dream Come True**

The concept of our revered leader *Thanthai* Chelvanayakam that the Tamil speaking people should be ruled by themselves is the bedrock on which the DC structure is built. The District Development Council will certainly make his dream come true.

**An Experiment**

The Development Council is no doubt an experiment. For this reason, it becomes incumbent on every one of its members to view their task with a keen sense of responsibility and make the Council an institution which would eventually meet in adequate measure the aspirations of the Tamil people. The Jaffna District Development Council should be in a position to set the tone and standard for other Development councils to follow.

**Self-sufficiency in Food**

More than eight lakhs of people live in the Jaffna District. They require about 72 lakhs of bushels of paddy yearly. But we produce currently only 31 lakhs of bushels.

Paddy cultivation in the Jaffna District must be stepped up to the maximum capacity. To this end our tanks at Kilinochi and other places should be renovated to conserve rain water. It is also necessary that our efforts should be marked by a scientific approach so that we can achieve better yield of paddy.

**Subsidiary foodstuffs**

The production of chillies potatoes and other subsidiaries should be maintained at an efficient level by assuring the producers a fair guaranteed price for their commodities.

It is also very essential that the storage and marketing of the commodities should be well planned so that benefits may accrue both to the producers and consumers.

**The Coconut Plantations**

Hundreds of acres of coconut plantations in the district are in a state of negligence and poor maintenance, such as replanting etc. Such a state of affairs should not be allowed to continue. A Research Institute for coconut plantation is a necessity.

**The Palmyrah**

The palmyrah palms of Jaffna, have a potentiality for providing us a stable economy, and they need scientific know-how to transform them into a nucleus for a major industry. Here too Research Centres are a primary need.

**The Fishing Industry**

It should be remembered that our district has been favoured by nature with a sea around the peninsula. To this day, we have not tapped, to the full this natural resource. It is our duty to modernise the fishing industry so as to enable more young men to be attracted towards this lucrative source of income.

In this sphere as well as in the sphere of small industries, it is essential that private enterprise should team up with the state in a spirit of co-operation for the welfare of the community.

**Education and Employment**

Fruitful steps will have to be taken to raise the standard of education in our schools. Technical education at tertiary level should be provided in our Universities.

In the matter of employment, it is essential that the only principal the Council should follow is recruitment strictly on merit.

### The White Paper on Education

Some of the highlights of the New *White Paper on Education*, (according to news reports trickling in the Press) are:

(a) The abolition of Education Circuits and with them Education Officers. In their place will be School-Clusters with five to ten schools.

(b) Large Schools in Urban Areas will remain independent Administative Units under their own Principals.

(c) There will be two important School Examinations, one at Grade Eight and the other at Grade Eleven—Selection for higher education will be made at this point (and not as at present at Grade 10).

(d) Tertiary Education will be expanded to include Technical Education and also Aesthetic studies and accountancy courses.

(e) There will be two Advisory Bodies — one at the Ministry Level and the other at the local level.

(f) The Private Sector in Education will be given encouragement.

### The Lure of the Middle East

The first three months of this year has seen the peak of the exodus of Sri Lankans to foreign destinations. The majority left for the Middle East:—

| | |
|---|---|
| January:— | 14,687 |
| February:— | 12,010 |
| March:— | 12,973 |

*Registered as a Newspaper at the G. P. O., Sri Lanka under No. QB./100/25/81*

Printed for the Jaffna Diocese of the Church of South India by Mr. Philip Matthews residing at 19, Lady of Miracles East Road, Jaffna, and published by Mr. Alvappillai Rajasingam, 330, Navalar Road Jaffna, at Sri Sanmuganatha Press, Kankesanthurai Road, Jaffna on Friday, 24th July, 1981.